17.03.16

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### புகையிலை ஆராய்ச்சி மையத்தில் பணி

ஆந்திராவில் செயல்பட்டு வரும் மத்திய புகையிலை ஆராய்ச்சி மையத்தில்(சி.டி.ஆர்.ஐ) காலியாக உள்ள 34 டெக்னீசியன், டெக்னிக்கல் உதவியாளர் பணியிடங்களுக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

தகுதி: பிளஸ் 2 தேர்ச்சியுடன் விவசாயம் சம்மந்தப்பட்ட அறிவியல், சமூக அறிவியல் பிரிவில் இளங்கலை பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

ஆன்லைனில் விண்ணப்பிப்பதற்கான கடைசி தேதி: 19.03.2016

மேலும் முழுமையான விவரங்கள் அறிய www.ctri.org.in என்ற இணையதளத்தை பார்க்கவும்.

# செண்டுமல்லி பயிரிட்டால் வருடம் முழுவதும் வருமானம்



அரக்கோணம்: தோட்டக்கலை பயிர்களிலேயே அதிக அளவில் தினமும் வருவாய் தரக்கூடியதும், ஆண்டு முழுவதும் மகசூல் கொடுக்கக் கூடியது மலர்ப் பயிர்கள் மட்டுமே. அதிலும், உதிரி மலர்கள் வரிசையில் வருவாயை அதிக அளவில் அள்ளிக் கொடுப்பது செண்டுமல்லி ஆகும். களர், உவர் நிலங்கள் அல்லாத அனைத்து வகை நிலங்களிலும் வளரக்கூடிய செண்டுமல்லியைப் பயிரிடுவதும், பாதுகாப்பதும் எளிமையானது என்பதால் விவசாயிகள் அதிகம் விரும்பக்கூடிய மலர்ப்பயிர் செண்டுமல்லி விளங்குகிறது.

செண்டுமல்லியில் பலவித ரகங்கள் உள்ளன. அவை எம்.டி.யு.1, உள்ளூர் மஞ்சள், ஆரஞ்சு வகைகள், பூசா நரங்கி கெய்ன்டா, பூசா பசந்தி கெய்ன்டா ஆகியனவாகும்.

மண், தட்பவெப்ப நிலை: நல்ல வடிகால் வசதியுடன் கூடிய அனைத்து வகை மண்ணிலும் பயிரிடலாம். கார அமிலத் தன்மை 6.0 முதல் 7.5 வரை இருக்கவேண்டும். களர், உவர் நிலங்கள் சாகுபடிக்கு ஏற்றதல்ல. செண்டுமல்லிக்கு சீரான மிதவெப்ப நிலை அவசியம். சமவெளி, மலைப் பிரதேசங்களில் பயிரிடலாம்.

நிலம் தயாரித்தல்: நிலத்தை நன்கு உழுது கடைசி உழவின்போது ஹெக்டேருக்கு 25 டன் மக்கிய தொழு உரம் இட வேண்டும். பின்னர் 15 செ.மீ. இடைவெளியில் பாத்திகள் அமைக்க வேண்டும். விதைகளைப் பொருத்தவரை செண்டுமல்லிக்கு ஹெக்டேருக்கு ஒன்றரை கிலோ விதை தேவை. செண்டுமல்லியைப் பயிரிட குறிப்பிட்ட காலம் தேவையில்லை. ஆண்டு முழுவதும் பயிரிடலாம். இருந்தாலும் ஜூன், ஜூலை மாதங்கள் நடவு செய்ய மிகவும் ஏற்றது.

நாற்றங்கால் தயாரித்தல்: நிலத்தை இரண்டு அல்லது மூன்று முறை நன்கு உழுது, கடைசி உழவின்போது மக்கிய தொழு உரம் இட்டு மண்ணோடு நன்கு கலக்கிவிட வேண்டும். விதைகளை 200 கிராம் அசோஸ்பைரில்லம் கொண்டு நேர்த்தி செய்த பிறகு 15 செ.மீ. இடைவெளியில் விதைகளை வரிசையாக பாத்திகளில் விதைத்து மண் கொண்டு மூடி, உடன் நீர்ப் பாய்ச்ச வேண்டும். விதைகள் 7 நாள்களில் முளைத்து விடும். 30 நாள்கள் ஆனவுடன் நாற்றுக்களைப் பிடுங்கி நடவு செய்ய வேண்டும்.

நடவு: வரிசைக்கு வரிசை 45 செ.மீ., செடிக்கு செடி 30 செ.மீ., இடைவெளியில் நாற்றுகளை நட வேண்டும். வயதான நாற்றுகளைத் தவிர்த்துவிட்டு நல்ல வாளிப்பான ஒரு மாத வயதான நாற்றுகளையே நடவு செய்ய வேண்டும்.

ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை: ஒரு ஹெக்டேருக்கு 45 கிலோ தழைச்சத்து, 90 கிலோ மணிச்சத்து, 75 கிலோ சாம்பல் சத்து கொடுக்கக்கூடிய ரசாயன உரங்களை அடியுரமாக இட வேண்டும். நட்ட 45 நாள்கள் கழித்து ஹெக்டேருக்கு 45 கிலோ தழைச்சத்து கொடுக்கக்கூடிய ரசாயன உரத்தை இட்டு மண் அணைக்க வேண்டும். தேவை ஏற்படும்போது கண்டிப்பாக களை எடுக்கவேண்டும்.

நீர் நிர்வாகம்: நட்டவுடன் முதல் தண்ணீரும், பிறகு மூன்றாம் நாள் உயிர்த் தண்ணீரும் பாய்ச்ச வேண்டும். பிறகு வாரம் ஒரு முறை நீர்ப் பாய்ச்ச வேண்டும். நீர் தேங்குவதைத் தவிர்க்க வேண்டும். நுனி கிள்ளுதல் பணியை செவ்வனே செய்தால் கிளைகள் வளருவதில் தடை இருக்காது. நட்ட 30 நாள்களில் செடியின் நுனிப்பகுதி அல்லது முதல் பூ மொட்டுகளை கிள்ளி எடுக்க வேண்டும். இவ்வாறு செய்வதால் கிளைகள்

அதிகம் தோன்றி அதிகமான பூ மொட்டுகள் உண்டாகும்.

ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு: சிவப்பு சிலந்திப் பூச்சிகள் செடிகளின் இலைகள், பூக்களிலிருந்து சாற்றினை உறிஞ்சும். சேதம் அதிகமாகும்போது பூக்கள் காய்ந்துவிடும். இதனைக் கட்டுப்படுத்த கெல்த்தேன் என்ற மருந்தை ஒரு லிட்டர் நீருக்கு ஒரு மில்லி வீதம் கலந்து தெளிக்க வேண்டும். இலைப்புள்ளி நோயை தவிர்க்க முதலில் இலைகளில் வட்டமான சிவப்பு நிறப் புள்ளிகள் தோன்றும். பிறகு, புள்ளிகள் பெருகி இலைகள் கருகிவிடும். இதனைக் கட்டுப்படுத்த, பெவிஸ்டின் 1 கிராம் மருந்தை 1 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். வேர் அழுகல் நோய் செண்டுமல்லி செடியை பாதிக்கலாம். வளர்ந்த செடிகளையும், நாற்றுகளையும் இது தாக்கும். இந்நோய் பாதித்தால் வேர் அழுகிவிடும். இதனைக் கட்டுப்படுத்த லிட்டர் நீருக்கு ஒரு கிராம் பெவிஸ்டின் மருந்து கலந்து செடியைச் சுற்றி ஊற்ற வேண்டும்.

அறுவடை: செடியின் வயது 130 முதல் 135 நாள்கள் ஆகும். நட்ட 60-ஆம் நாளில் இருந்து பூக்க ஆரம்பித்துவிடும். 80 முதல் 90 சதவீதம் வரை மலர்ந்த பூக்களை 3 நாள்களுக்கு ஒரு முறை அறுவடை செய்யலாம். ஒரு ஹெக்டேருக்கு 18 டன் பூக்கள் வரை மகசூல் கிடைக்கும்.

செண்டுமல்லியைப் பொருத்தவரை சந்தைப்படுத்துதல் மிகவும் எளிது. கிராமங்களுக்கு அருகில் இருக்கும் சிறிய நகரங்களிலும் செண்டுமல்லிக்கு தேவை இருக்கும். சிரமம் பார்க்காமல் பெரிய நகரங்களுக்கு எடுத்துச் சென்றால் அதிக வருமானம் பார்க்கலாம்.

செண்டுமல்லி பயிரிடுவது குறித்து மேலும் விவரங்கள் தேவைப்படுவோர் தங்களது வட்டாரங்களில் உள்ள வேளாண் விரிவாக்க மையங்களுக்குச் சென்று அங்கிருக்கும் தோட்டக் கலைத் துறை உதவி வேளாண் அலுவலர்களை அணுகலாம். மேலும், வட்டார தோட்டக் கலைத் துறை உதவி இயக்குநர் அலுவலகங்களில் செண்டுமல்லிக்குத் தேவைப்படும் விதைகளையும், பயிரிடுவது குறித்த ஆலோசனைகளையும் பெறலாம்.

## ஏப்ரல் - மே மாதங்களுக்கு ஏற்ற தீவனச் சோளம் சாகுபடி!



திருநெல்வேலி: விவசாயிகள் தீவனச் சோளம் பயிரிட்டு, தங்களது கால்நடைகளுக்கான தீவனச் செலவைக் குறைக்கலாம் என, வேளாண் துறை அறிவுறுத்தியுள்ளது.

பருவம்: இறவைப் பயிராக ஜனவரி - பிப்ரவரி, ஏப்ரல் - மே மாதங்களில் தீவனச் சோளம் பயிரிட உகந்த மாதங்கள். தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் பயிரிடலாம். மானாவாரிப் பயிராக ஜூன் - ஜூலை, செப்டம்பர் - அக்டோபர் மாதங்களிலும் அனைத்து மாவட்டங்களில் பயிரிடும் வாய்ப்புள்ளது.

ரகங்கள்: கோ எஃப், எஸ் 29, கோ 31 (மறுதாம்பு சோளம்) ரகங்கள் சிறந்தவை. தீவனச் சோளத்துடன் கோ 5, கோ எஃப் சி 8 ரக தட்டைப்பயறு சேர்த்து ஊடுபயிராகப் பயிரிட்டால் சத்தான தீவனம் பெறலாம்.

சாகுபடிக் குறிப்புகள்: தீவனச் சோளம் கோ 31 ரகத்தை ஆண்டு முழுவதும் இறவைப் பயிராகப் பயிரிடலாம். ஒருமுறை விதைத்து பலமுறை அறுவடை செய்யலாம்.

நிலம்: நீர் தேங்காத நல்ல வடிகால் வசதியுள்ள நிலத்தைத் தேர்வு செய்ய வேண்டும். நிலத்தைத் தயார் செய்யும்போது 2 அல்லது 3 முறை உழுது பண்படுத்த வேண்டும். பண்படுத்தப்பட்ட நிலத்தில் 60 செ.மீ. இடைவெளியில் பார்கள் அமைக்க வேண்டும். உழும் முன்பு ஹெக்டேருக்கு 25 டன் தொழுவுரம் இடுதல் அவசியம்.

விதையளவு: ஹெக்டேருக்கு 5 கிலோ விதை போதும். 30-க்கு 15 செ.மீ. இடைவெளியில் விதைகளை பார்களின் இருபுறமும் விதைக்க வேண்டும். விதை உற்பத்தி செய்ய 60-க்கு 15 செ.மீ. இடைவெளியில் விதைக்க வேண்டும்.

உர நிர்வாகம்: அடியுரமாக தழை, மணி, சாம்பல் சத்து ஆகியவற்றை 45: 40: 40 என்ற விகிதாசாரத்தில் இட வேண்டும்.

விதைத்த 30-ஆவது நாளில் 45 கிலோ யூரியா இட வேண்டும். ஒவ்வோர் ஆண்டு முடிவுக்குப் பிறகு 45: 40: 40 கிலோ தழை, மணி, சாம்பல் சத்து இட வேண்டியது அவசியம்.

களை நிர்வாகம்: விதைத்த 25 அல்லது 30 நாளில் முதல் களை எடுக்க வேண்டும். பிறகு தேவைப்படும்போது ஒவ்வொரு அறுவடைக்குப் பின்பும் ஒருமுறை களையெடுத்து உரமிட வேண்டும்.

நீர்ப்பாசனம்: விதைத்தவுடன் நீர்ப் பாய்ச்சி மூன்றாம் நாள் உயிர்த் தண்ணீர் கொடுத்த பிறகு 7 அல்லது 10 நாள்களுக்கு ஒருமுறை மண் வகை, மழை அளவைப் பொறுத்து நீர் பாய்ச்ச வேண்டும். தீவனச் சோளத்தில் பயிர்ப் பாதுகாப்பு பொதுவாக தேவையிராது.

பசுந்தீவன அறுவடை: 50 விழுக்காடு பூக்கும் தருணத்தில் அறுவடை செய்யலாம். முதல் அறுவடையானது விதைத்த 65 முதல் 70 நாளில் மேற்கொள்ளலாம். அடுத்த அறுவடைகளை 50 நாள்களுக்கொருமுறை மேற்கொள்ள வேண்டும்.

விதை அறுவடை: விதைத்த 110 அல்லது 125ஆவது நாளில் அறுவடை செய்யலாம்.

பசுந்தீவன மகசூல்: ஹெக்டேருக்கு ஆண்டுக்கு 192 டன்கள் கிடைக்கும். 6 அல்லது 7 முறை அறுவடை செய்ய வேண்டும்.

விதை மகசூல்: ஹெக்டேருக்கு 1,000 கிலோ விதை கிடைக்கும்.

ஆண்டுக்கு 3 முறை அறுவடை செய்யலாம். விதை உறக்க நிலை 45 முதல் 60 நாளாக உள்ளது. எனவே, அறுவடைக்குப் பிறகு 60 நாள் கழித்து விதைக்க வேண்டும்.

## வைகை பாசனத்துக்கு தண்ணீர் திறக்க விவசாயிகள் கோரிக்கை

மதுரை மாவட்டத்தில் பெரியாறு வைகை பாசனத்தின் இருபோக, ஒருபோக பாசனப் பகுதிகளுக்கு இறுதிக் கட்டமாக ஒருமுறை பாசனநீர் வழங்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து பெரியாறு வைகை பாசன விவசாயிகள் ஆட்சியரிடம் திங்கள்கிழமை அளித்த மனு: பெரியாறு இருபோக, ஒருபோக பாசன பகுதிகளில் தற்போது பாசனத்துக்கு தண்ணீர் வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளது. இப்பகுதிகளில் நெற் பயிர்களைக் காப்பாற்ற இன்னும் ஒருமுறை இறுதிக் கட்ட தண்ணீர் திறந்து விட வேண்டும். அவ்வாறு இல்லையெனில் விளைந்த நெற் பயிர்களைக் காக்க முடியாது. கிணறு, கண்மாய் நீர் ஆதாரங்கள் இல்லாத நேரடி பாசன நிலங்களின் நிலை இன்னும் மோசமாக உள்ளது. ஆகவே, இன்னும் ஒருமுறை பெரியாறு பாசனப் பகுதிக்குத் தண்ணீர் திறந்து விட நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளனர்.

மேலூர்: பெரியாறு- வைகை பாசன ஒரு போகம் மற்றும் இருபோக சாகுபடி பகுதிகளில் நெற்பயிரைக் காப்பாற்ற ஒருமுறை, அணைகளில் இருந்து தண்ணீர் திறக்க வேண்டும் என மேலூர் ஒரு போக சாகுபடி விவசாயிகள் சங்கத் தலைவர் மீ.முருகன், இருபோக சாகுபடிப் பகுதி விவசாயிகள் சங்கத் தலைவர் மண்ணாடிமங்கலம் முருகன் மற்றும் ரவி, திருப்பதி ஆகியோர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

**விவசாயிகள் கவனத்துக்கு...**

கோவை மாவட்ட விவசாயிகள் தரமான விதைகளை வாங்கிப் பயனடையுமாறு விதை ஆய்வுத் துணை இயக்குநர் சுமதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

காய்கறி விதைகள் மற்றும் மக்காச்சோளம் பயிறு வகை விதைகள், எண்ணெய் வித்து பயிர்கள் சாகுபடி செய்யும் விவசாயிகள் தரமான விதைகளை வாங்கிப் பயனடைய வேண்டும். விதை விற்பனை உரிமம் பெற்ற நிறுவனங்களில் மட்டுமே விதைகளை வாங்க வேண்டும். அவ்வாறு விதைகளை வாங்கும்போது, விவசாயிகள் விற்பனைப் பட்டியலை விற்பனையாளரிடம் பெற வேண்டும். விற்பனைப் பட்டியலில் விவசாயியின் முழு முகவரி குறிப்பிட வேண்டும்.

மேலும், பயிர், ரகம், குவியல் எண் மற்றும் காலாவதி நாள் ஆகிய விவரங்கள் குறிப்பிடப்பட்டு விற்பனையாளர் கையொப்பம் மற்றும் விவசாயிகள் கையொப்பமிட்டு வாங்க வேண்டும். தரமற்ற விதைகளை விற்பனை செய்வது கண்டுபிடிக்கப்பட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

கூடுதல் விவரங்களுக்கு விதை ஆய்வுத் துணை இயக்குநர், 1424 ஏ, தடாகம் சாலை, ஜி.சி.டி (அஞ்சல்), கோவை-13 என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**அவிநாசியில் ரூ. 65 லட்சத்துக்கு பருத்தி ஏலம்**

அவிநாசியில் புதன்கிழமை நடைபெற்ற பருத்தி ஏலத்தில் ரூ. 65 லட்சத்துக்கு வர்த்தகம் நடைபெற்றது.

அவிநாசி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் வாரந்தோறும் பருத்தி ஏலம் நடைபெற்று வருகிறது. இந்த வாரம் நடைபெற்ற ஏலத்துக்கு 3,700 பருத்தி மூட்டைகள் கொண்டு வரப்பட்டன.

இதில், ஆர்.சி.எச். ரகப் பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 4,000 முதல் ரூ. 4,750 வரையிலும், டி.சி.எச். ரகப் பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ.

5,000 முதல் ரூ. 6,250 வரையிலும், மட்டரகப் பருத்தி ரூ. 1,600 முதல் ரூ. 2,000 வரையிலும் ஏலம் போனது.

இந்த ஏலத்தில், பென்னாகரம், கிணத்துக்கடவு, கோபி, நம்பியூர், அன்னூர், திருப்பூர், பல்லடம், சேவூர், குன்னத்தூர், அவிநாசி, புளியம்பட்டி, மேட்டூர், அன்னூர் ஆகிய பகுதிகளிலிருந்து 350 பருத்தி விவசாயிகளும், கோவை, ஈரோடு பகுதியிலிருந்து 15 பருத்தி வியாபாரிகளும் கலந்து கொண்டனர்.

## ரூ.62 லட்சத்துக்கு கொப்பரை ஏலம்

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் புதன்கிழமை நடைபெற்ற ஏலத்தில், ரூ. 62 லட்சத்துக்கு கொப்பரை ஏலம்போனது.

பெருந்துறை மற்றும் சுற்றுப்பகுதி விவசாயிகள், 2,531 மூட்டைகளில் 1,22,000 கிலோ கொப்பரை கொண்டு வந்திருந்தனர். இதில், முதல் தர கொப்பரை குறைந்தபட்ச விலையாக கிலோ ரூ.49.50-க்கும், அதிகபட்சமாக ரூ. 53.05-க்கும் விற்பனை ஆனது.இரண்டாம் தரக் கொப்பரை குறைந்தபட்ச விலையாக கிலோ ரூ. 37.30-க்கும், அதிகபட்சமாக ரூ. 48.75-க்கும் ஏலம்போனது. மொத்தம் ரூ. 62 லட்சத்துக்கு கொப்பரை ஏலம்போனதாக சங்கத் தலைவர் அருள்ஜோதி கே.செல்வராஜ் தெரிவித்தார்.

## நெற் பயிர்களில் மஞ்சள் கரிப்பூட்டை,புகையான் நோய்களை கட்டுப்படுத்தும் வழிமுறை:வேளாண் உதவி இயக்குநர் தகவல்

மேற்கு ஆரணி பகுதியில் நெல் பயிரில் காணப்படும் மஞ்சள்கரிப்பூட்டை மற்றும் புகையான் நோய்களை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து வேளாண் உதவி இயக்குநர் செ.சுந்தரம் தெரிவித்துள்ளார்.

மேற்கு ஆரணி வட்டாரத்தில் நெற்பயிரை தாக்கும் மஞ்சள் கரிப்பூட்டை மற்றும் புகையான் நோய்த் தாக்குதலால் பாதிக்கப்பட்ட நெல் வயல்களில் வேளாண்மை உதவி இயக்குநர் செ.சுந்தரம் மற்றும் வேளாண்மை அலுவலர் எஸ்.கீதா, உதவி வேளாண்மை அலுவலர்கள், அட்மா தொழில்நுட்ப வல்லுநர்கள் ஆகியோர் செவ்வாய்க்கிழமை கள ஆய்வு

செய்து விவசாயிகளுக்கு பயிர் பாதுகாப்பு ஆலோசனைகளை வழங்கினர்.

இது குறித்து வேளாண்மை உதவி இயக்குநர் செ.சுந்தரம் கூறியது: கடந்த டிசம்பர் மாதத்தில் நடவு செய்யப்பட்ட நெல் பயிரில் புகையான் மற்றும் மஞ்சள் கரிப்பூட்டை நோய்த் தாக்குதல் அதிக அளவில் காணப்படுகிறது. அறுவடைக்கு தயாராக உள்ள பயிர்களில் பாதிப்பு அதிகளவில் உள்ளதால், மகசூல் இழப்பதை தடுக்க பின்வரும் கட்டுப்பாடு முறைகளை பின்பற்றலாம்.

மஞ்சள் கரிப்பூட்டை நோய்: இந்த நோய் தாக்கப்பட்ட ஒவ்வொரு தனி தானியமும் மஞ்சள் நிற கனியுடலாக மாற்றம் அடைந்து காணப்படும். நோய் தாக்கப்பட்ட தானிய நெல்லில் மென்பட்டு துணி போன்ற தோற்றத்துடன் பச்சையான கருப்பு நிற நெற்பழ உருண்டைகள் காணப்படும்.

முதலில் இந்த உருண்டைகள் மிகவும் சிறியதாகவும், பின் வளர்ச்சியடைந்து 1 செ.மீ அளவு வரை பெரிதாகிறது. இவை நெல் உமிக்களுக்கிடையே உள்ள பூப்பகுதிகளை சுற்றியும் காணப்படும்.

கதிர் இலைப்பருவம் மற்றும் பால் பருவங்களில் இந்த நோய்த் தாக்குதலை தடுப்பதற்கு காப்பர் ஆக்சிஃலோரைடு 2.5 கிராம் அல்லது ப்ரோபிகோனசோல் 10 மி.லி. ஆகிய ஒன்றை தெளிக்க வேண்டும். கார்பெண்டசிம் 2.0 கிராம் என்ற அளவில் விதை நேர்த்தி செய்ய வேண்டும். தூர் விடும் பருவம், பூத்தல் முன் பருவங்களிலும் கார்பெண்டசிம் மற்றும் தாமிரம் சார்ந்த பூசனக்கொல்லிகளை தெளிக்க வேண்டும்.

புகையான் நோய்: புகையான் நோய் தாக்குதல் ஏற்பட்டால், நீர் மட்டத்துக்கு மேலிருக்கும் பயிரின் அடிப்பகுதியில் இளங்குஞ்சுகள் மற்றும் முதிர் பூச்சிகள் ஒட்டிக்கொண்டிருக்கும்.

தாக்கப்பட்ட பயிர்கள் முற்றிலும் காய்ந்து தீய்ந்த நிலையில் காட்சியளிக்கும். பழுப்புத் தத்துப்பூச்சியானது புல்தழைகுட்டை நோய், காய்ந்த குட்டை நோய் மற்றும் வாடிய குட்டை நோய் ஆகியவற்றை பரப்பும் உயிரியாக திகழ்கிறது. முதிர்ச்சியடைந்த பயிர்கள் காய்ந்து

வட்டமான திட்டுகளாக காணப்படும். மேலும், பயிர்கள் சாய்ந்து விடும். இந்த நோயைக் கட்டுப்படுத்த தேவைக்கு அதிகமாக தழைச்சத்து உரங்கள் பயன்படுத்துவது மற்றும் தேவைக்கு அதிகமான தண்ணீர் பாய்ச்சுவதை தவிர்க்க வேண்டும். விளக்குப்பொறி அமைத்து புகையானை கவர்ந்து அழிக்கலாம். வயலில் நன்றாக தண்ணீர் வடிந்த பிறகு பூச்சிக்கொல்லி மருந்து தெளிக்க வேண்டும் என்றார்.

## நெல் பயிரில் நோய் தாக்குதல்: வேளாண் அதிகாரிகள் ஆய்வு

போளூர் பகுதியில் பயிரிடப்பட்டுள்ள நெல் பயிரில் புகையான் நோய் தாக்குதல் குறித்து வேளாண்மை உதவி இயக்குநர் வடமலை மற்றும் அலுவலர்கள் புதன்கிழமை ஆய்வு மேற்கொண்டனர்.

போளூரை அடுத்த அத்திமூர், மாம்பட்டு, வசூர், குருவிமலை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் விவசாயிகள் தங்கள் நிலங்களில் நெல் பயிரிட்டுள்ளனர். இந்தப் பயிர்கள் தற்போது அறுவடைக்கு தாயாராகியுள்ள நிலையில், இதில் புகையான் நோய் தாக்குதல் காணப்படுகிறது.

இந்த நோயை கட்டுப்படுத்துவது குறித்து வேளாண்மை உதவி இயக்குநர் வடமலை தலைமையிலான அலுவலர்கள் நேரடியாக விவசாயிகளை சந்தித்து ஆலோசனை வழங்கியதுடன், நெல் பயிரிடப்பட்டுள்ள வயல்களில் இறங்கி ஆய்வு மேற்கொண்டனர்.

மேலும், போளூர் பகுதியில் உள்ள வேளாண் உரக்கடை உரிமையாளர்களுக்கு புகையான் நோய் உள்பட நெல் பயிரில் வரும் நோய்கள் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.

## ராஜா வாய்க்காலில் மார்ச் 20-ல் தண்ணீர் திறப்பு

பரமத்தி வேலூர் வட்டம் ஜேடர்பாளையம் படுகையணை பகுதியில் ராஜா வாய்க்காலில் வரும் மார்ச் 20-ஆம் தேதி முதல் தண்ணீர் திறக்கப்படும் என பொதுப்பணித்துறை அறிவித்துள்ளது.

ஒவ்வொரு வருடமும் மார்ச் மாதம் வாய்க்கால் பராமரிப்புப் பணிக்காக ராஜா வாய்க்காலில் 15 நாள்கள் தண்ணீர் நிறுத்தப்படுவது வழக்கம். இதற்காக நாமக்கல் சரபங்கா வடிநில கோட்ட செயற் பொறியாளர்

தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டு தண்ணீர் நிறுத்தப்படுவது வழக்கம்.

இந்த ஆண்டும் வாய்க்கால் பராமரிப்புப் பணிக்காக தண்ணீர் நிறுத்துவது குறித்தும் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்வது குறித்தும் கடந்த மாதம் 29-ஆம் தேதி விவசாயிகளிடையே ஆலோசனை செய்யப்பட்டது.

அதன்படி மார்ச் 1-ம் தேதி முதல் ராஜா வாய்க்காலில் தண்ணீர் நிறுத்தம் செய்யப்பட்டு பராமரிப்புப் பணிகள் நடைபெற்று வந்தது. இந்த நிலையில் பராமரிப்புப் பணிகள் முழுமையாக நிறைவடையாத நிலையில் மீண்டும் விவசாய சங்கப் பிரதிநிதிகளுடன் ஆலோசனை நடத்தப்பட்டது.

இதில் வரும் 19-ம் தேதிக்குள் ராஜா வாய்க்காலில் பராமரிப்புப் பணிகள் முடிக்கப்பட்டு மார்ச் 20-ஆம் தேதி காலை மீண்டும் ராஜா வாய்க்காலில் பாசனத்திற்காகத் தண்ணீர் திறக்க முடிவு செய்யப்பட்டதாக பொதுப்பணித்துறை இளம் பொறியாளர் இளங்கோ தெரிவித்தார். தற்பொழுது காவிரியாற்றில் குடிநீர் பயன்பாட்டிற்கு மட்டுமே தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. இந்தத் தண்ணீரை விவசாயம் மற்றும் ஆலைகள் உள்ளிட்டவைகளுக்கு பயன்படுத்தக்கூடாது. மீறி எடுப்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பொதுப்பணித்துறை மூலம் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

**தென்னை விவசாயிகளுக்கு மண் பரிசோதனை முகாம்**

துகை தென்னை விவசாயிகள் உற்பத்தியாளர் கம்பெனி மற்றும் ஸ்பிக் நிறுவனம் இணைந்து நடத்திய மண் பரிசோதனை முகாம் அறந்தாங்கி பகுதிகளில் நடைபெற்றது.

அறந்தாங்கி, அரசர்குளம், வல்லவாரி, ஆயிங்குடி, வல்லம்பகாடு, குருந்திரக்கோட்டை, தாந்தாணி, விச்சூர் உள்ளிட்ட ஊர்களில் ஞாயிறு முதல் செவ்வாய் வரை 3 நாட்கள் நடைபெற்ற முகாமில் தென்னை விளைநிலங்களில் 1,833 விவாயிகளுக்கு மண் பரிசோதனை செய்யப்பட்டு சான்று வழங்கப்பட்டது.

ஏற்பாடுகளை உற்பத்தியாளர் கம்பெனி தலைவர் ப. செல்லத்துரை, மற்றும் நிர்வாகிகள் டி.ஏ.என். பீர்சேக், ஆதி. ரவீந்திரகுமார், ப. அய்யாவு உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

மேலும் விடுபட்ட விவசாயிகளுக்கு அறந்தாங்கி அகரம் பகுதியில் உள்ள அலுவலகத்தில் மண் பரிசோதனை செய்து கொள்ளலாம் என்றும், மத்திய,மாநில அரசுகளின் நலத்திட்டங்களுக்கு மண் பரிசோதனை அவசியம் என்றார் தலைவர் ப.செல்லத்துரை.

**இறால் பண்ணைகளை புதுப்பிக்க ஆட்சியர் உத்தரவு**

விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள உவர்நீர் இறால் பண்ணைகள் அனைத்தும் மத்திய அரசின் கடல்சார் உயிரின வளர்ப்பு ஆணையத்தால் பதிவு செய்துள்ள பதிவுச் சான்றை ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பிக்க வேண்டும் என்று ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து, ஆட்சியர் எம்.லட்சுமி வெளியிட்ட செய்திக்குறிப்பு: கடல்சார் உயிரின வளர்ப்பு ஆணையத்தில், தங்களின் இறால் பண்ணைகள் பதிவு செய்யப்பட வேண்டும். பதிவு செய்து 5 ஆண்டுகள் முடிந்திருந்தால், அதனை புதுப்பித்துக்கொள்ள வேண்டும். இதற்கான விண்ணப்பங்கள் மீன் துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் கிடைக்கும்.

இவ்வாறு கடல்சார் உயிரின வளர்ப்பு ஆணையத்தில் பதிவு செய்யாமல் உள்ள இறால் பண்ணைதாரர்களுக்கு ரூ.1 லட்சம் வரை அபராதமும், இரண்டு ஆண்டுகள் சிறைத் தண்டனையும் விதிக்க சட்டம் உள்ளது.

அரசுக்குச் சொந்தமான இடத்தில் இறால் பண்ணைகள் அமைத்திருந்தால், அவை அகற்றப்படுவதோடு, சம்பந்தப்பட்டவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

ஏற்கெனவே வரி இறால் வளர்க்க அனுமதி பெற்றவர்கள், வெனாமி இறால் வளர்க்க விரும்பினால் அதற்காக தனியாக அனுமதி பெற வேண்டும் என்று அதில் தெரிவித்துள்ளார் ஆட்சியர்.

**விவசாயிகளுக்கு நெல், பயறு விதை உற்பத்தி பயிற்சி**

தரமான நெல் மற்றும் பயறு விதை உற்பத்தி குறித்து விவசாயிகளுக்கு வேளாண் வல்லுநர்கள் பயிற்சி அளித்தனர்.

காரைக்கால் பண்டித ஜவாஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில், நெல் மற்றும் நெல் தரிசு பயறுகளில் தரமான

விதை உற்பத்தி குறித்த பயிற்சி கல்லூரி வளாகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

காரைக்கால் மாவட்டத்தில் உள்ள விதை உற்பத்தியாளர்கள் பலர் கலந்துகொண்டனர்.

பயிற்சியை கல்லூரி முதல்வர் வி. கந்தசாமி தொடங்கிவைத்தார். தரமான விதைகளின் உபயோகம், விதை உற்பத்தியில், வேளாண் கல்லூரியின் பங்கு குறித்து அவர் விளக்கினார். இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் விதைத் திட்டம் மற்றும் நிரந்தர விதை நுட்பவியல் ஆராய்ச்சி மையம் ஆகியவை செயல்பாடுகள் வேளாண் கல்லூரியில் பயன்பாட்டில் உள்ளன. இதனால் விவசாயிகளுக்கான பயன்கள் குறித்து முதல்வர் விளக்கிப் பேசினார்.

தரமான விதை உற்பத்தியின் மூலம் குறைந்த பயிர் செலவு மற்றும் அதிக மகசூல் உள்ளிட்ட பயிற்சியின் நோக்கம் குறித்து கல்லூரியின் விதை நுட்பவியல் பேராசிரியர் மற்றும் திட்ட முதன்மை அலுவலர் டி. ராமநாதன் பேசினார்.

புதிய ரகங்கள் குறித்து பயிர் இனப்பெருக்கம் மற்றும் மரபியல் துறைப் பேராசிரியர் ஆர். கோவிந்தராசு விளக்கிப் பேசினார். புதுச்சேரி அரசின் காரைக்கால் கூடுதல் வேளாண் இயக்குநர் கா. மதியழகன், இணை வேளாண் இயக்குநர் என். ராஜேந்திரன் ஆகியோர் கருத்துரை வழங்கினர். மேலும், கல்லூரியின் பேராசிரியர் பலர், பல்வேறு தலைப்புகளில் பேசினர். சுமார் 100 விதை உற்பத்தியாளர்கள் கலந்துகொண்டனர்.

**அல்சூர் ஏரியில் மீன்கள் வளர்க்கப்படும்:மேயர் மஞ்சுநாத் ரெட்டி**

பெங்களூரு அல்சூர் ஏரியில் மாநகராட்சி சார்பில் மீன்கள் வளர்க்கப்படும் என்று மேயர் மஞ்சுநாத் ரெட்டி தெரிவித்தார்.

பெங்களூரு அல்சூர் ஏரியை செவ்வாய்க்கிழமை பார்வையிட்ட பின்னர், செய்தியாளர்களிடம் அவர் கூறியது:

அண்மையில் அல்சூர் ஏரியில் மீன்கள் இறந்து மிதந்தன. இதுகுறித்து அங்கு குடியிருப்போர் மாநகராட்சியிடம் புகார் அளித்தனர். அதன் பேரில்

ஆய்வு நடத்தப்பட்ட போது, ஏரியில் மீன் வளர்ப்பதில் மீன்வளத் துறையினரின் அலட்சியமாக இருந்தது தெரிய வந்தது.

எனவே, அல்சூர் ஏரியில் மீன்களை வளர்க்கும் பணியை மாநகராட்சியே இனி ஏற்கும். ஏரியைத் தூய்மைப்படுத்தும் பணியிலும் ஈடுபடும். மீன்களைப் பிடிப்பதில் குத்தகைதாரர்களிடையே ஏற்பட்ட போட்டியில் மீன்கள் இறந்துள்ளன.

எனவே, ஏரியில் வளர்க்கப்படும் மீன்களைப் பாதுகாக்க அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். இதற்கு மீன் வளத் துறை ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றார்.

நிகழ்ச்சியில் அமைச்சர் ரோஷன் பெய்க், மாமன்ற உறுப்பினர் மமதா சரவணா, கிரிஸ்ப் அமைப்பின் தலைவர் குமார் ஜாகிர்தார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**விவசாயிகள் அதிரடி பின்பட்ட கரும்பு சாகுபடி துவக்கம்**

உத்திரமேரூர் : கரும்பு பயிரிடுதல் குறித்து, சர்க்கரை ஆலையில் முன்பதிவு செய்யாமல்,பின்பட்ட சாகுபடிக்கானகரும்பு நடவு பணிகளைகரும்பு விவசாயிகள் துவக்கியுள்ளனர்.

உத்திரமேரூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட கரும்பு விவசாயிகள், தாங்கள் பயிரிடும் கரும்புகளை அரவைக்கு பழையசீவரம், தனியார் சர்க்கரை ஆலைக்கு அனுப்புவது வழக்கம். ஆனால், நடப்பாண்டில் இந்த ஆலை இயங்காததால், மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு, கரும்புகளை அனுப்ப விவசாயிகள் வலியுறுத்தினர்.ஆனால், விவசாயிகளின் விருப்பத்திற்கு மாறாக, திருவண்ணாமலை மாவட்டம், போளூர் அருகே உள்ளதனியார் சர்க்கரை ஆலைக்கு கரும்புகள் அனுப்ப அனுமதிக்கப் பட்டன. இந்நிலையில், தற்போது முன்பட்ட சாகுபடிக்கான

அறுவடை முடிந்துள்ள நிலையில், அடுத்த சாகுபடிக்கான கரும்புகளை எந்த ஆலைக்கு அனுப்புவதென விவசாயிகள் தீர்மானிக்க இயலாத நிலையில், முன்பதிவு இல்லாமலேயே, பின்பட்ட கரும்பு சாகுபடிக்கான பணியில் கரும்பு விவசாயிகள் ஈடுபட்டுஉள்ளனர்.

படாளம் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் எங்கள் கரும்புகளை அரவை செய்ய, பதிவு செய்ய வேண்டும் என்ற எங்கள் கோரிக்கைக்கு, மாவட்ட நிர்வாகம் செவி சாய்க்கவில்லை. அந்த தனியார் சர்க்கரை ஆலைக்கு கரும்புகளை அனுப்ப விருப்பம் இல்லாததால், பதிவு செய்யாமல், பின் பட்ட சாகுபடிக்கான நடவை துவக்கி உள்ளோம். தனபால், விவசாயி, சாத்தணஞ்சேரி

**கோடைகாலபதநீர்**

வெயில் காலத்தில் தாகத்தை தீர்ப்பதற்காக பாட்டில் மென்பானங்களை அதிகளவில் எடுத்துக்கொள்கிறோம்.ஆனால் இதற்கு பதிலாக இயற்கையான பதநீர் அருந்துவது நல்லது. ஒரு பனை மரத்தில் இருந்து ஆண்டுக்கு சுமார் 180 லிட்டர் பதநீர் கிடைக்கும். பனைமரத்தின் பூம்பாளையில் இருந்து பதநீர் இறக்கப்படுகிறது. இறக்கியவுடன் நொதித்தல் அடைந்து கள்ளாக மாறுவதைத் தடுக்க, பானையின் உள்ளே சுண்ணாம்பு பூசப்படும். 100 மில்லி பதநீரில் சுமார் 12 முதல் 17 கிராம் சுக்ரோஸ் உள்ளது. பதநீரில் பொட்டாசியமும், புரதமும் உள்ளன. பனையில் இருந்து மட்டுமல்ல, தென்னையில் இருந்தும் பதநீர் இறக்கலாம்.

**உர விற்பனையாளர்களுக்கு ஓராண்டு பட்டய கல்வி**

ஈரோடு: வேளாண் இடுபொருட்கள் விற்பனை செய்து வரும், உரிமம் பெற்ற விற்பனையாளர்களுக்காக, ஓராண்டு பட்டய கல்வி நடத்தப்படுகிறது. வேளாண் இடுபொருட்கள் விற்பனை செய்து வரும் உரிமம் பெற்ற விற்பனையாளர்கள், வேளாண் தொழில் நுட்பம் சார்ந்த கல்வி அறிவு பெறுவது அவசியமாகும். இதை உறுதிப்படுத்த, மாநில அரசின் வேளாண் விரிவாக்க மேலாண்மை பயிற்சி மையம் மற்றும் மத்திய அரசின் 'மேனேஜ்' நிறுவனம், இப்பட்டய கல்வியை

வழங்குகிறது. நடப்பாண்டு இப்பயிற்சியை, வேளாண் அறிவியல் நிலையமான மைராடா மூலம், ஈரோட்டில் நடத்தப்பட உள்ளது. குறைந்த பட்சம், எஸ்.எஸ்.எல்.சி., பயின்ற, உர விற்பனை உரிமம் பெற்றவர், இப்பயிற்சியில் பங்கேற்கலாம். விருப்பம் உள்ளவர்கள், தங்களது பாஸ்போர்ட் அளவு புகைப்படம், உர விற்பனை உரிமம் நகல், கல்வி சான்று, அடையாள அட்டை நகலுடன் மைராடாவை அணுகலாம். முதலில் வரும் நபர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும், என வேளாண் உதவி இயக்குனர் (தரக்கட்டுப்பாடு) சண்முகசுந்தரம் தெரிவித்துள்ளார். கூடுதல் விவரம் பெற, 04285 241626, 94438 97654, 98653 66075, 94435 46094 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

**கோமாரி தடுப்பு ஊசி முகாம்**

கரூர்: கரூர் மாவட்டம், புனவாசிப்பட்டியில் கால்நடைகளுக்கு கோமாரி தடுப்பூசி முகாம் நடந்தது. குளித்தலை கோட்ட கால்நடை பராமரிப்பு துறை உதவி இயக்குனர் முருகன் தலைமையில், குழுவினர் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போட்டு சிகிச்சை அளித்தனர். இங்கு, மகிளிப்பட்டி, உடையான்தோட்டம், புனவாசிப்பட்டி, அந்தரப்பட்டி, வீரணம்பட்டி, மத்திப்பட்டி, பாலப்பட்டி, நரசிங்கபுரம் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள, 1,200 கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது. கால்நடை ஆய்வாளர்கள் கிருஷ்ணமூர்த்தி, ஜெயந்தி, ஜானகி, உட்பட பலர் பங்கேற்றனர்.

**மா மரங்களில் நோய் தாக்குதலால் விளைச்சலூபாதிப்பு! காய்கள் குறைந்ததால் தவிப்பில் விவசாயிகள்**

ஆண்டிபட்டி: ஆண்டிபட்டியில் பகுதியில் மா மரங்களில் நோய் தாக்குதல் காரணமாக, பூக்கள், பிஞ்சுகள் உதிர்ந்து விளைச்சலில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அதை கட்டுப்படுத்த முடியாமல்

விவசாயிகள் பரிதவிக்கின்றனர்.மாவட்டத்தில் பெரியகுளம், போடி, ஆண்டிபட்டி பகுதிகளில் அதிக அளவில் மா சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

இங்கு விளையும் காசா, செந்தூரம், கல்லாமை ரகங்கள் அதிகமாக தமிழகத்தின் பல பகுதிகளுக்கும் விற்பனைக்கு அனுப்பப்படும். ஒவ்வொரு ஆண்டும் ஜனவரியில் மா மரங்களில் பூக்கள் பூக்கும். அதன்பின் இரண்டு மாதத்தில் காய்கள் காய்த்து பறிக்கும் நிலைக்கு வந்து விடும்.

பிப்ரவரி, மார்ச் மாதங்களில் காய்களுக்கு அதிக கிராக்கி இருக்கும் என்பதால் சிறு காய்களிலேயே பறித்து விற்பனைக்கு அனுப்பி விடுவர். ஏப்ரல், மே மாதங்களில் கிடைக்கும் முதிர்ந்த காய்கள் பழங்களுக்கு பயன்படுத்தப்படும். தொடர்ந்து ஆகஸ்ட் மாதம் வரையில் மாம்பழங்கள் வரத்து ஏற்படும்.

ஏமாற்றம்: கடந்த இரு மாதங்களுக்கு முன் பூத்துக்குலுங்கிய மாமரங்களில் இந்தாண்டு அதிகப்படியான விளைச்சல் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் இருந்த விவசாயிகளுக்கு தற்போது பெருத்த ஏமாற்றம் ஏற்பட்டுள்ளது.கூடுதல் விளைச்சலுக்காக, அதிக செலவு செய்து மருந்து தெளித்து மரங்களை பராமரித்து வந்தனர்.

கடந்த சில நாட்களாக மாமரங்களில் இருந்த பூக்கள் படிப்படியாக உதிர்ந்து வருகிறது. அதனுடன் பிஞ்சுகளும் உதிர்வதால் மரங்களின் காய்ப்புத்தன்மை குறைந்துள்ளது. மரங்களில் தேன் ஒழுகல் நோய், சிலந்தி பூச்சி தாக்குதலால் ஏற்பட்டுள்ள இந்த பாதிப்பை கட்டுப்படுத்த முடியாமல் விவசாயிகள் பரிதவிக்கின்றனர்.

வைகை அணை பகுதி மா விவசாயி வி.தங்கப்பாண்டி கூறியதாவது: சில வகை மருந்துகள் அதிக விளைச்சல் தரும் என்ற நம்பிக்கையில் தெளித்து வந்தோம். ஆனால் மா மரங்களில் நோய் தாக்குதல் கட்டுப்படுத்தப்படவில்லை. பூக்கள், பிஞ்சுகள் உதிர்ந்துள்ளதால், விளைச்சல் பெருமளவில் பாதிப்பு ஏற்படுகிறது.

தற்போதுள்ள சூழலில் மரங்களில் இலைகளை மறைக்கும் அளவுக்கு காய்த்திருக்க வேண்டும். ஆனால் காய்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக உள்ளது. மாவட்டத்தில் இருந்து ரூ.50 கோடிக்கு மாங்காய், மாம்பழம் வர்த்தகம் நடைபெறும். இந்தாண்டு மரத்தில் நோய் தாக்கம் விவசாயிகள், வியாபாரிகளுக்கு பெரிய பாதிப்பை ஏற்படுத்தி

விடும். இதில் வேளாண் அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் ,"என்றார்.

## இன்றைய வேளாண் செய்திகள்

### கையால் ஊன்றி பயிரிடுவதால் உளுந்து, எள் விளைச்சல் அமோகம்

குறிஞ்சிப்பாடி, : குறிஞ்சிப்பாடியை அடுத்த அயன்குறிஞ்சிப்பாடியில் மாவட்டத்தில் முதன்முறையாக கையால் ஊன்றுதல் முறையில் உளுந்து, எள்ளை பயிரிட்டுள்ளனர். இதனால் அதிக மகசூல் கிடைப்பதாக விவசாயிகள் மகிழ்ச்சியுடன் கூறுகின்றனர். இது குறித்து விவசாயி ராமலிங்கம் கூறுகையில், எள், உளுந்து போன்றவற்றை கையால் ஊன்றி நடவு செய்வது என்பது 2 அடிக்கு 2 அடி கான் பிடித்து கையாலேயே நடவு முறையில் பயிரிடுவதாகும்.

ஏக்கர் ஒன்றுக்கு பயிர் செய்வதற்கு 1 கிலோ எள் மட்டுமே தேவைப்படுகிறது. சாதா நடவு முறையை விட இம்முறையில் ஏக்கருக்கு இரண்டு மூட்டை அதிகமாக மகசூல் கிடைக்கும். இந்த முறையில் பயிர் செய்வதால் நல்ல காற்றோட்டமாக இடைவெளிவிட்டு இருப்பதால் காய்ப்பு அதிகரித்து கிடைக்கும்.

இம்முறையில் பயிரிடுவதன் மூலம் உரச் செலவும் குறைவாகவே உள்ளது. ஏக்கர் ஒன்றுக்கு அரை மூட்டை டேப் உரம் போடப்படும். சாதா பயிருக்கு 1 மூட்டை ஆகும். உளுந்து சாதா முறையில் விதைப்பதற்கு 8 முதல் 10 கிலோ வரை செலவாகும். ஆனால், இதற்கு மூன்றரை கிலோ மட்டுமே செலவாகிறது. இதேபோல் அறுவடையின் போது சாதா முறையில் 4 மூட்டை கிடைக்கும், இதில் 8 மூட்டை வரை கிடைக்கிறது, என்றார்.

## தர்மபுரி சந்தைக்கு முலாம்பழம் வரத்து அதிகரிப்பு கிலோ ரூ.30க்கு விற்பனை

தர்மபுரி : தர்மபுரி சந்தைக்கு முலாம்பழம் வரத்து அதிகரித்துள்ளது. கிலோ ரூ.30க்கு விற்பனை செய்யப்படுகிறது. கோடையையொட்டி ஆந்திர மாநிலத்தில் முலாம்பழம் சீசன் துவங்கியுள்ளது. இதையடுத்து, தர்மபுரி மாவட்டத்திற்கு ஆந்திர மாநிலம் கடப்பாவில் இருந்து வாரந்தோறும் 10 டன் முலாம்பழம் லாரிகள் மூலம் கொண்டு வரப்படுகிறது. தர்மபுரி சந்தைப்பேட்டைக்கு வரும் முலாம்பழங்களை தரம் பிரித்து, கிலோ ரூ.30 மற்றும் ரூ.40க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதுகுறித்து வியாபாரிகள் கூறுகையில், நடப்பாண்டில் முலாம்பழம் விற்பனை அதிகமாக உள்ளது. கடந்தாண்டு வாரத்திற்கு 5 டன் முலாம்பழங்கள் மட்டுமே வரும். தற்போது 10 டன்னுக்கு குறையாமல் முலாம்பழம் வருகிறது. முலாம்பழத்தை மக்கள் ஆர்வமுடன் வாங்கிச் செல்வதால் விற்பனை அதிகரித்துள்ளது. கிலோ ரூ.30 முதல் ரூ.40 வரையிலும் விற்பனை செய்யப்படுகிறது என்றனர்.

## மொரப்பூர் பகுதியில் விளைச்சல் அமோகம் வெண்டைக்காய் கிலோ ரூ.5க்கு விற்பனை

அரூர் : மொரப்பூர் பகுதியில் விளைச்சல் அமோகமாக உள்ளதால், வெண்டைக்காய் விலை சரிந்துள்ளது. கிலோ ரூ.5க்கு விற்பனை செய்யப்படுகிறது. தர்மபுரி மாவட்டம் மொரப்பூர், கம்பைநல்லூர், நல்லம்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் வெண்டை விளைச்சல் அமோகமாக உள்ளது. இரண்டு மாத பயிரான வெண்டைக்கு நன்றாக பாசன வசதி இருந்தால் 45 நாட்களில் விளைச்சல் தர துவங்கும். தொடர்ந்து 2 மாதம் வரையிலும் ஒரு நாள்விட்டு ஒரு நாள் அறுவடை செய்தால் நாளொன்றுக்கு 120 முதல் 150 கிலோ வரையிலும் விளைச்சல் கொடுக்கும். தற்போது, மொரப்பூர் பகுதியில் வெண்டை விளைச்சல் அமோகமாக உள்ளது. கம்பைநல்லூர், மொரப்பூர், தர்மபுரி உள்ளிட்ட இடங்களில் மொத்த வியாபாரிகள் மண்டிகள் வைத்து கொள்முதல் செய்து தமிழகம் மட்டுமின்றி கேரளா, கர்நாடகாவிற்கும் விற்பனைக்கு அனுப்புகின்றனர். நாள்தோறும் சுமார் 15 டன் வெளி மாவட்டங்களுக்கும் வெளி மாநிலங்களுக்கும் விற்பனைக்கு

அனுப்பப்படுகிறது. கடந்த 10 தினங்களுக்கு முன்பு கிலோ ரூ.8 வரை விற்பனை செய்யப்பட்டது. தற்போது ரூ.5 க்கு மொத்த விலையில் கொள்முதல் செய்யப்படுகிறது.

**தண்டுப்பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்துவது எப்படி?**

அரியலூர், : நிலக்கடலையில் தண்டுப்பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்துவது எப்படி என்று பெரியநாகலூரில் வேளாண் அலுவலர்கள் செயல் விளக்கமளிக்கனர்.அரியலூர் மாவட்டம் பெரியநாகலூர் கிராமக்கில் அரியலூர் வட்டார வேளாண் துறை சார்பில் அட்மா திட்டத்தின் கீழ் கடலை சாகுபடி பண்ணைப்பள்ளி முகாம் நடைப்பெற்றது. முகாமிற்கு அரியலூர் வட்டார வேளாண் உதவி இயக்குநர் மோகன் தலைமை வகித்தார். அட்மாதிட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் பழனிசாமி ◌ேபசுகையில், கடலை பயிருக்கான ரகத்தேர்வு, விதை நேர்த்தி செய்தல், பூச்சிக்கட்டுப்பாடு, நோய் கட்டுப்பாடு, கடலையில் எண்ணெய் வளம் அதிகம் வருவதற்கு கையாளப்படும் தொழில்நுட்ப உக்திகள் ஆகியவற்றினை எடுத்துரைத்தார்.

பின்னர் கடலை வயலில் காணப்படும் பூச்சிகளான இலைசுருட்டுபுழு, காய்ப்புழு, கண்டுப்பூச்சி, இலைப்பேன், செம்பேன், ஆகியவற்றினை இனங்கண்டறிதல் பற்றியும் அவற்றினை கட்டுப்டுத்தும் முறைகள் குறித்து செயல்விளக்கம் மூலம் செய்து காண்பித்தார். இதே போன்று கடலையில் வரக்கூடிய நோய்களான இலைப்புள்ளிநோய், டிக்கா இலைப்புள்ளி நோய், கண்டு அழுகல் நோய், மஞ்சள் பூஞ்சானம் நோய், வேரழுகல் நோய் ஆகியவற்றினை எவ்வாறு இனங்கண்டறிதல் என்பது பற்றியும், அவைகளை கட்டுப்படுத்தும் முறைகள் பற்றியும் செயல்விளக்கம் மூலம் செய்து காண்பித்தார். இப்பண்ணை பள்ளி விவசாயிகளை அட்மாதிட்ட உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் வாசுகி, சுந்தரமூர்த்தி, உதவி வேளாண் அலுவலர் வேல்முருகன் ஆகியோர் தேர்வு செய்திருந்தனர். முடிவில் அட்மா திட்ட விவசாயி ரவிச்சந்திரன் நன்றி கூறினார்.

## காய்கறி, கீரை, தக்காளி விற்பனை களைகட்டுது

திருச்சி, : திருச்சி மத்திய சிறை அங்காடியில் காய்கறி, கீரை, தக்காளி விற்பனை களைகட்டி வருகிறது. தமிழகத்தில் மொத்தம் 9 மத்திய சிறை சாலைகள் உள்ளது. அனைத்து மத்திய சிறைகளிலும் உள்ள சிறைவாசிகளின் நலனை கருத்தில்கொண்டும், நிதி ஆதாரத்தை பெருக்கவும் அவர்களுக்கு வெல்டிங் பயிற்சி, காய்கறி உற்பத்தி, விவசாயம் உள்ளிட்ட பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகிறது. திருச்சி மத்திய சிறை வளாகத்தில் 50 ஏக்கரில் காய்கறி, வாழை, தென்னை சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. காய்கறிகளில் பீட்ரூட், முள்ளங்கி, கத்தரிக்காய், வெண்டை, சுரைக்காய், புடலை, பீன்ஸ், தண்டுக்கீரை, சிறுகீரை, தக்காளி, பச்சை மிளகாய், கறிவேப்பிலை, கொத்தமல்லி, கொத்தவரங்காய் ஆகியவை சாகுபடி செய்யப்படுகிறது.

சாகுபடி செய்யப்பட்ட பொருட்களை விற்பனை செய்ய சிறை வளாகத்தில் சிறை அங்காடி திறக்கப்பட்டது. காலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை இந்த அங்காடி திறந்து இருக்கும். சிறை அங்காடி டிபன் கடையில் இட்லி, தோசை, புரோட்டா, தயிர், லெமன் சாதம் ஆகியவை விற்பனை செய்யப்படுகிறது. வெளிமார்க்கெட்டில் விற்கப்படும் பொருட்களின் விலையை விட இங்கு 10 சதவீதம் விலை குறைவாக விற்கப்படுகிறது.

இயற்கை உரங்களை கொண்டு விளைவிக்கப்படும் காய்கறி, கீரை வகைகளை போலீசார் மற்றும் பொதுமக்கள் அதிகளவில் வாங்கி செல்கின்றனர். காலை நேரங்களில் வாக்கிங் செல்வோர் திருச்சி சிறை அங்காடியில் கீரை, காய்கறிகளை வாங்கி செல்வது அதிகரித்து வருகிறது. அதுபோல் டிபன் வகைகளான லெமன், தயிர் மற்றும் இட்லி, தோசை, பரோட்டா ஆகியவற்றின் விற்பனையும் அதிகரித்துள்ளது.

கடந்த பொங்கல் பண்டிகைக்காக சிறையில் விளைவிக்கப்பட்ட கரும்புகளும் அதிகளவில் விற்பனை செய்யப்பட்டது. வெளி மார்க்கெட்டில் விற்பனை செய்வதை விட மிக குறைந்த விலையில்

பொருட்கள் விற்பனை செய்யப்படுவதால் சிறை அங்காடியில் வாடிக்கையாளர்கள் வருகை பெருமளவில் அதிகரித்து வருகிறது.சிக்கன் பிரியாணி சிறை அங்காடியில் கடந்த 10 தினங்களுக்கு கூடுதலாக அசைவ உணவும் தயாரித்து விற்பனை செய்யப்படுகிறது. இதில் சிக்கன் பிரியாணி மட்டும் தயாரிக்கப்படுகிறது. இதன் விற்பனை மதியம் 12 மணிமுதல் 2 மணிவரை மட்டுமே விற்பனை செய்யப்படுகிறது. சிக்கன் பிரியாணியின் விலை ரூ.60 ஆகும்.

மிகக் குறைந்த விலை

காய்கறியில் நாட்டு தக்காளி விலை வெளி மார்க்கெட் விட வெகு குறைவாக ரூ.6க்கு விற்கப்படுகிறது. கீரை வகைகள் ரூ.5க்கு விற்கப்படுகிறது. இந்த குறைந்த விலைக்கு விற்பனை அறிந்த சில சில்லரை வியாபாரிகள் சிறை அங்காடிக்கு வந்து அதிகளவில் தக்காளி, கீரைகளை வாங்கி அதிக விலைக்கு விற்று வருவதாகவும் சிறைக்குறையினர் கவலை கொள்கின்றனர். இதில் கடந்த 2015ம் ஆண்டு ஜுன் முதல் டிசம்பர் வரையிலான சிறை அங்காடி விற்பனை மொத்த நிகர லாபம் ரூ.60 லட்சம் என சிறைத்துறையினர் கூறுகின்றனர்.

**பயறுவகை பயிர்களை சாகுபடி செய்ய ஆலோசனை**

பட்டுக்கோட்டை. : திருவோணம் வேளாண் உதவி இயக்குர் அலுவலக பணிகளை ஆய்வு செய்த வேளாண் உதவி இயக்குனர் ஞானஒளி மனிதர்களுக்கு புரதசத்து பற்றாக்குறையை போக்கிட வாய்ப்புள்ள இடங்களில் பயறுவகை பயிர்களை சாகுபடி செய்ய வேண்டும் என்று ஆலோசனை வழங்கினார்.பட்டுக்கோட்டை அடுத்த திருவோணம் வேளாண் உதவி இயக்குநர் அலுவலக பணிகளை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் ஞானஒளி திடீர் ஆய்வு செய்தார். முதலில் 70 ஆகிய பதிவேடுகளை ஆய்வு செய்து, நிலுவை பணிகளை ஒரு வார காலத்திற்குள் முடிக்கும்படி அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

வேளாண் துறையில் சிறப்பு திட்டமாக செயல்படுத்தப்பட்டு வரும் மண்வள அட்டை இயக்கம் தொடர்பாக மண் மாதிரிகள் எடுத்தல் பணி

மற்றும் அது தொடர்புடைய இணைப்பு படிவங்கள் 1 மற்றும் 2 வேளாண் வலை களத்தில் (எப்.சி.எம்.எஸ்) பதிவேற்றம் செய்தல் மற்றும் பயிர்கள் சார்ந்த சாகுபடி குறிப்புகளை விளக்கிடும் மண்வளம் குறித்த மண்வள அட்டைகள் விவசாயிகளுக்கு விநியோகித்தல் போன்ற பணிகளை விரைந்து முடிக்க கள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

பசுந்தாளுர விதைகள் விநியோகக் கிட்டக்தை விவசாயிகளுக்கு பிரபலபடுத்தி இருப்பிலுள்ள சணப்பு பசுந்தாளுர விதையை மானிய விலையில் உடன் விநியோகித்து முடிக்க கள அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார். மேலும் ஒருங்கிணைந்த உணவு தானிய உற்பத்தி திட்ட இலக்கின்படி உற்பத்தி இலக்கினை எட்டுவதற்கு ஏற்ப கோடை நெல் சாகுபடி மற்றும் உளுந்து சாகுபடி பரப்பினை அதிகப்படுத்த கேட்டுக்கொண்டார். புரதச்சத்து பற்றாகுறையை போக்கிட பயறு வகை பயிர்களின் சாகுபடி பரப்பினை அதிக அளவில் கொண்டு வருதவதற்கு அவற்றை தனிப்பயிராகவும், ஊடுபயிராகவும், கலப்பு பயிராகவும், வரப்பு பயிராகவும் வாய்ப்பு உள்ள இடங்களில் எல்லாம் சாகுபடி செய்ய ஆலோசனை வழங்கினார்.

ஒரத்தநாடு பொதுப்பணிதுறை உதவி பொறியாளர் புவனேஸ்வரி, திருவோணம் வேளாண் உதவி இயக்குநர் மதியரசன், வேளாண்மை அலுவலர் முருகேசன், உதவி விதை அலுவலர் முருகையன், அட்மா திட்ட தொழில்நுட்ப அலுவலர்கள் மேனகா, நெடுஞ்செழியன், ரத்தினம் ஆகியோர் உடனிருந்தனர்.

**பயறு வகைகளில் மகசூல் பெருக்க பயிற்சி**

நீடாமங்கலம், : நீடாமங்கலம் வேளாண் அறிவியல் நிலையம் சார்பில் பயறுவகை பயறுகளில் உயர்விளைச்சல் பெறுவதற்கான சாகுபடி தொழில் நுட்பங்கள் பற்றிய பயிற்சி திருராமேஸ்வரம் கிராமத்தில் நடந்தது. நிலைய தலைவர் பாஸ்கரன் தலைமை வகித்தார். மன்னார்குடி வேளாண் உதவி இயக்குனர் உத்திராபதி முன்னிலை வகித்தார்.திருராமேஸ்வரம் ஊராட்சி தலைவர் மாரியப்பன் பயிற்சியை துவக்கி வைத்தார். வேளாண் அறிவியல் நிலைய உதவி பேராசிரியர்

காமராஜ், பூச்சியியல்துறை உதவி பேராசிரியர் ராஜாரமேஷ் ஆகியோர் கலந்து கொண்டு பயிற்சி அளித்தனர்.

பயிற்சியில் பயறுவகை பயறுகளின் மகசூலை அதிகரிக்க வளர்ச்சி ஊக்கிகள் கொண்ட பூஸ்டரை பூக்கள் பூக்க ஆரம்பிக்கும் தருணத்தில் ஒரு ஏக்கருக்கு 2 கிலோ என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீரில் தேவையான அளவு ஒட்டும் திரவத்துடன் கலந்து தெளிக்கும் முறைகள் பற்றி செயல்விளக்கம் அளித்தனர். நிலைய உதவி பேராசிரியர் சிவக்குமார், மருத்துவர் சரவணன், வேளாண்மை அலுவலர் விஜயகுமார் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## கோமாரி நோய் தடுப்பூசி முகாம்

திருத்துறைப்பூண்டி : திருத்துறைப்பூண்டி லயன்ஸ் கிளப், லியோ கிளப் மற்றும் மன்னார்குடி கோட்ட தமிழ்நாடு அரசு கால்நடை பராமரிப்பு துறை சார்பில் குன்னூர், குரும்பல், மணலி, சேகல், பாமணி, தேசிங்குராஜபுரம், கொருக்கை, வேளூர் ஆகிய ஊராட்சிகளில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடைபெற்றது. லயன்ஸ் கிளப் தலைவர் செந்தில்குமார் தலைமை வகித்தார். செயலாளர் சக்கரபாணி வரவேற்றார். முகாமில் கால்நடை உதவி மருத்துவர்கள் காவியா, சுரேந்தர், விஷ்வேந்தர், கால்நடை ஆய்வாளர்கள் முருகானந்தம், ஜெகநாதன், சாந்தி ஆகிய மருத்துவ குழுவினர் 4350 மாடு, கன்றுகளுக்கு கோமாரி தடுப்பூசி போட்டனர். சங்க பொருளாளர் வேதமணி நன்றி கூறினார்.

## சாத்தான்குளம் பகுதியில் விளைநிலத்தில் மேயும் கால்நடைகளை அடைக்க பவுண்ட் விவசாயிகள் எதிர்பார்ப்பு

சாத்தான்குளம், : சாத்தான்குளம் பகுதியில் விவசாய நிலத்தில் மேயும் ஆடு, மாடுகளை அடைத்து வைக்கும் பவுண்ட் திட்டத்தை மீண்டும் செயல்படுத்த வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.

சாத்தான்குளம் பகுதியில் மானாவரி நிலம் அதிகம் உள்ளதால் ஊர்ப்புறங்களில் விவசாயம் சகஜமாக நடைபெறுகிறது. இதனால் ஆடு, மாடு, கோழிகள் எளிதாக தோட்டம் மற்றும் வயல்களில் புகுந்து பயிர்களை மேய்ந்தும், அழித்தும் நாசம் செய்கின்றன.

கடந்த காலங்களில் பயிரை அழிக்கும் ஆடு, மாடுகளை பிடித்து அடைத்து வைக்கும் பவுண்ட் செயல்பட்டு வந்தது. இதில் அடைக்கப்படும் ஆடு, மாடுகளின் உரிமையாளர்கள் உரிய அபராத தொகையை வருவாய்த்துறையிடம் செலுத்தி ரசீது வாங்கிய பின்பே அவற்றை மீட்கமுடியும். மேலும், தொடர்ந்து அதே ஆடு, மாடுகள் தோட்டத்தில் மேய்ந்தால் பயிர் அழிவுக்கு ஈடாக கால்நடைகளின் உரிமையாளர்களிடம் தண்டத் தொகை வசூல் செய்யும் நிலையும் இருந்து வந்தது.

இந்த திட்டம் கிராமங்களில் கடந்த 1996ஆம் ஆண்டு வரை நடைமுறையில் இருந்து வந்ததாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். வருவாய் கிராமங்கள் தோறும் பவுண்ட்கள் இருந்தன. இதனால் கஷ்டப்பட்டு வளர்க்கும் பயிரை கால்நடைகள் அழிப்பது ஓரளவு தடுக்கப்பட்டுவந்தது. தற்போது கிராமங்களில் பவுண்ட்கள் இருந்த இடம் பாழடைந்து காணப்படுகிறது. சில கிராமங்களில் பாழடைந்த பவுண்டை அப்பகுதியைச் சேர்ந்தவர் மாட்டுத்தொழுவமாக பயன்படுத்துகின்றனர்.

பவுண்ட் இல்லாததால் பயிரை மேயும் கால்நடைகளின் உரிமையாளர்களிடம் நேரடியாக விவசாயிகள் பேசி பிரச்னை ஏற்படுகிறது. இதன்மூலம் தகராறுகள் மட்டுமின்றி சாதி மோதலும் ஏற்பட்டுவிடுகிறது. உயிரைக் கொடுத்து பயிரை வளர்க்கும் விவசாயிகள் பலர் இந்த சிரமத்துக்காகவே வயலும், கிணறும் வளமாய் இருந்தும் விவசாயம் செய்யாமல் விட்டுவிடுகின்றனர்.

எனவே, கிராமங்களில் இந்த பவுண்ட் திட்டத்தை மீண்டும் கொண்டு

ஆடு, மாடுகளால் ஏற்படும் அழிவையும், மக்களிடையே ஏற்படும் மோதல்களையும் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர். இதுகுறித்து செங்குளம் ஆயக்கட்டு விவசாய சங்க செயலாளர் முருகேசன் கூறுகையில் , '1996ஆம் ஆண்டு வரை பயிரை அழிக்கும் ஆடு, மாடுகளை பவுண்டில் அடைக்கும் நடைமுறை இருந்தது. அப்போது ஒரு மாட்டுக்கு ரூ50ம், ஆட்டுக்கு ரூ25ம் வசூல் செய்யப்பட்டது. இதன்மூலம் விவசாயிக்கு நிம்மதியும் அரசுக்கு வருவாயும் கிடைத்தது.

இப்போது பவுண்ட் இல்லாததால் விவசாய நிலங்களில் மேயும் ஆடு, மாடுகளை முறையாக கட்டுப்படுத்த முடியவில்லை. விவசாயம் சீரழியும் வேதனையில் கால்நடைகளை அடித்தாலோ, காயப்படுத்தினாலோ மோதல்கள் உருவாவதோடு, வீண் வம்பு வழக்கு ஏற்பட்டு அதன் மூலம் விவசாயத்தை தொடரமுடியாமல் போகிறது. ஆகவே, பவுண்ட் முறையை மீண்டும் அமல்படுத்த தேர்தலுக்கு பிறகு அமையும் அரசு உத்தரவிட வேண்டும் என்றார்.

இன்றைய வேளாண் செய்திகள்

## கொளுத்தும் கோடை வெயில்: தர்மபுரிக்கு வெள்ளரிக்காய் வரத்து அதிகரிப்பு கிலோ ரூ.60-க்கு விற்பனை



கோடை வெயில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில் தர்மபுரிக்கு வெள்ளரிக்காய் வரத்து அதிகரித்து உள்ளது. ஒரு கிலோ வெள்ளரிக்காய் ரூ.60-க்கு விற்பனை செய்யப்படுகிறது.

வெள்ளரிக்காய்

தமிழகம் முழுவதும் கோடை வெயில் கொளுத்த தொடங்கி உள்ளது. தர்மபுரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக வெயிலின் அளவு படிப்படியாக அதிகரித்து வருகிறது. கோடை வெயிலின் தாக்கம்

அதிகரித்து வருவதால் பொதுமக்கள் குளிர்ச்சி தரும் உணவு பொருட்களை விரும்பி சாப்பிட தொடங்கி உள்ளனர். கோடை வெயில் காரணமாக ஏற்படும் உடல் சூட்டை தணிப்பதில் வெள்ளரிக்காய்க்கு மிக முக்கிய பங்கு உண்டு.

தமிழகத்தில் நாமக்கல் மாவட்டத்தில் வெள்ளரிக்காய் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகிறது. கோடை காலத்தில் அதிகளவில் உற்பத்தியாகும் இந்த வெள்ளரிக்காய் வரத்து தர்மபுரிக்கு கடந்த சில நாட்களாக அதிகரித்து உள்ளது.

கிலோ ரூ.60-க்கு விற்பனை

தர்மபுரி நகரில் உள்ள சாலையோர தள்ளுவண்டிகளில் தற்போது வெள்ளரிக்காய் விற்பனை அதிகரித்து உள்ளது. ஒரு கிலோ வெள்ளரிக்காய் ரூ.60-க்கு விற்பனை செய்யப்படுகிறது. தோல் சீவிய ஒரு தட்டு வெள்ளரி துண்டுகள் ரூ.10-க்கு விற்பனை செய்யப்படுகிறது. உப்பு, மிளகாய் தூள் கலந்த பொடியை தூவி தள்ளுவண்டிகளில் விற்பனை செய்யப்படும் வெள்ளரிக்காய்களை பொதுமக்கள் ஆர்வத்துடன் வாங்கி சாப்பிடுகிறார்கள்.

இதுதொடர்பாக வெள்ளிக்காய் விற்பனையில் ஈடுபடும் தள்ளுவண்டி வியாபாரிகள் கூறுகையில், வெள்ளரிக்காய் சீசன் தற்போது தொடங்கி உள்ளது. கோடைகாலம் முடியும் வரை வெள்ளரிக்காய் விற்பனை அதிகரிக்கும். இந்த ஆண்டு வெள்ளரிக்காய் வரத்து அதிகரித்ததால் விலை சற்று குறைய வாய்ப்பு உள்ளது என்று தெரிவித்தனர்.